கார் மேகம் ([illegible])

[illegible]

[illegible]

[illegible]

ஓலை
N18
116930

# Bhagavat Paritcha

or

# Neethimathy Charitram

(Being a Lyrical-Sermon or Kaletchepam on the conversation of Jesus the Jagat-Guru with Justa the Syrophoenician woman)

Mesbach Solomon

With an Introduction

by

THE REV. T. SUBRAMANYAM,
(Wesleyan Ex-Chaplain of Mesopotamian Forces.)

M. [illegible]
செப்பனிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட
ஜூலை மாதம் 1983 வருடம்
செப்பனிட்டு முடித்த
அக்டோபர் மாதம் 1983 வருடம்
ஆராய்ச்சி உதவியாளரின் கையொப்பம்.

உ

சென்னை
மைலாபூர்
வெஸ்லியன் மிஷன்
திருச்சபை ஊழியன்
மேஷாக் சாலமோன்
இயற்றிய

# பகவத் பரீக்ஷை

அல்லது

சிரோபெனீக்யாளாகிய

# நீதிமதி சரித்திரம்.

7 - MAR

THE HOGARTH PRESS,
MOUNT ROAD,
MADRAS.

1918

N18
116930

To

My Theological Tutor

THE REV. A. A. THOMAS, B.A.,

Now of Findlay College,

Mannargudy, Tanjore District

as a token of

*High Esteem and Deep Affection.*

# INTRODUCTION.

The author of the following pages has asked me to write a short introduction to his presentation of the conversation of Syrophoenician woman with Jesus Christ in a lyrical form. Rev. M. Solomon is a Minister of the Wesleyan Methodist Church in Madras. During his stay in Mylapore the Kalakshepam mode of presenting spiritual truths to the oriental minds was a revelation to him. Sreeman Iyadorai Baghavadar's lyrical method of preaching had a fruitful effect on him and his spare moments during the last few months were devoted to the writing of the story which is in simple and elegant Tamil. While lyrical it is also at once graphic and devotional.

Knowing it to be Mr. M's first attempt of the kind, I commend it with singular pleasure to the Tamil Christian public desirous of spreading the Gospel.

ROYAPETTAH,
28-12-18.

T. SUBRAHMANYAM.

## OPINIONS.

---

**Sangeetha Vidvan A. E. LITE Avergal, Madras.**

I have great pleasure in expressing my sincere approbation of the masterly way in which the author has brought out the composition to suit the Indian Music. The Ragas and Talas are quite appropriate to the purport of the composition. I wish the author every success in his undertaking.

---

**M. R. Ry. P. S. DURAISWAMI AIYANGAR Avl., Madras,**
**Author of several Dramatic and Musical Compositions in Tamil.**

To tell a story in songs is really a difficult art and it is the more so when the theme selected is one of devotion and the language, Tamil. Mr. Solomon has done a real service both to the Christian religion and to Tamil Literature by his valuable contribution of '**Bagavat Paritcha.**' The beauties and merits of the work will, I am a sure, appeal to every one whose mind and ears have been trained to such religious themes.

---

**The Rev. Dr. V. J. R. ASIRVATHAM, B. A., L. M. & S.,**
**U. F. C. M. College Church, Madras.**

I had the pleasure of perusing the lyrical composition of the Rev. Meshach Solomon, on the Story of the Syrophoenician woman. The play is divided into three cantos, of about 30 lyrics. The style is classical and some of the illustrations used are original and bold. There is no doubt that the writer had taken considerable pains in the development of the plot. The dramatic composition is sure to command the attention of Hindus as well as Christians. Hence I commend this booklet to those who are interested in lyrical preaching.

---

## முகவுரை.

---

பூலோக சிருஷ்டிகளில் சிறப்புள்ள மானிடர்கள் முக்திக்குக் காரணமானது தேவபக்தியே. தேவபக்திக்கு அத்யாவசியமானது மெய்யறிவே. கடவுளையும் குமாரக் கடவுளையும் அறிவதே நித்திய ஜீவன். இவ்வறிவானந்தமே பரமானந்தம். இவ்வறிவோடு கூடிய பக்திக்கு தியானமே வழியாகும். தியானமானது ஐம்புலன்களை தத்தம் வழி செல்லவிடாது தெய்வீக சிந்தையின்மேல் நிலை நிறுத்துவதே.

இதைச் சாதகப்படுத்த சில சிரேஷ்ட ஏதுக்கள் உண்டு. அவைகளில் ஒன்று வாத்தியங்களோடு கூடிய பகவத் கீதங்களும் உண்மை நிலை கீர்த்தனைகளுமே. மோசே மாமுனியர் இஸ்ரவேல் ஜனங்கள் தொழுகைக்கு வாத்திய கருவிகளை ஏற்படுத்தினதை அறிவோம். கடவுளுடைய கட்டளையும் அப்படியே இருந்ததாக 2 நாளா. 29:25-ல் காணலாம். "தாவீதும் காத்தும் நாத்தானும் கற்பித்தபடியே கைத்தாளம் தம்புரு சுரமண்டலங்களை வாசிக்கிற லேவியரை கர்த்தருடைய ஆலயத்தில் நிறுத்தினான். இப்படிச் செய்யவேண்டுமென்கிற கற்பனை கர்த்தரால் அவருடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு உண்டாயிருந்தது" என்பதே. மேலும் தாவீது கவிச்சக்ராவர்த்தியாகவும் சக்ரவர்த்தி கவியுமாக இருந்தாரென்பது விசேஷம். அவர் கவிகளைக் கட்டவும் பாடவும் கூடும், வாத்திய கருவிகளைச் செய்யவும் இனிமையாய்க் கொட்டவும் கூடும். அவர் கீர்த்தனைகள் இரக்ஷகருக்கே ஜெபமாலையாக இருந்ததென்றால் அதன் சிரேஷ்டம் எத்தன்மையது! ஓர் நாள் அவர் சவுலின் அஸ்திரத்திற்குத் தப்பியோடி அதுல்லாம் காட்டின் ஓர் கெபியில் ஒளித்திருந்தபோது வீணை மாத்திரம் அவர் கையைவிட்டுப் பிரியாதிருந்ததாம்.

இதன்றி, மனுஷன் தனக்குள் தானே நாத சொரூபியின் லக்ஷணத்தை உடையவன். மானிடர் பேசும் பாஷையே கீதங்கள்தான். இயல்பான பாஷையை அளவோடு இழுக்கச்சே இசை உண்டாகி காதிற்கு இன்பம் விளைவிக்கிறது. மயில், எருது, ஆடு, கிரவுஞ்சம்,

ருபில், குதிரை, யானை என்பவைகளின் தொனியைக் கொண்டு மனிதன் சுரங்களை பாகுபடுத்திக்கொண்டானே தவிர வேறில்லை. பண்டிதர் P. S. D. முத்துசாமி போதகர் தான் இயற்றிய இலக்கண பிரயோக விளக்கத்திலும், காலஞ்சென்ற பண்டிதர் மாகறல் கார்த்திகேய முதலியார் தன் மொழிநூலிலும் தமிழின் சிரேஷ்டத்தைப் பற்றி பல நியாயங்களை எடுத்துக் கூறுவர். இத்தமிழ் மொழியின் இனிமையை திண்ணைப்பள்ளிக்கூடத்தின் பிள்ளைகள் மண்மேல் 'அ' என்னும் அக்ஷரம் எழுதும்போதே அதில் பிறக்கும் இராகத்தினாலும் தாளத்தினாலும் அறியலாமே. தற்காலத்து மாதிரி (new model) யாக கற்றவர்க்கும் கற்பவர்க்கும் இவ்வினிமை பிறப்பிக்கச் செய்வது அரிதே. தமிழ் சங்கீதத்தின் மேன்மையைப்பற்றி விஸ்தாரமாக அறிய விரும்புவோர் ம-ா-ா-ஸ்ரீ Rao Sahib M. ஆபிரகாம் பண்டிதரவர்கள் வெளியிட்டிருக்கும் 'கர்ணாமிர்த சாகரம்' என்னுமோர் அரிய பெரிய நூலிற் காணலாம். இச்சிறந்த புத்தகத்தினால் அவர் தமிழ் உலகத்திற்கு செய்த நன்மை பெரியதேயாகும். புறதேச கீதங்களை இனிமையாய் பாடுகிறவர்களை கிளிப்பிள்ளையின் இனிய பேச்சுக்கு ஒப்பிடுவார் இப்பண்டிதர். கிளி தான் கற்றதை பேசுவதுடன் தன் சொந்த பாஷையை கத்தாவிட்டால் சந்தோஷமடைவதில்லை என்பார். இனி என் சிறு நூலுக்கியைந்த சிலவற்றைக் குறிப்பது தகைமையாகும்.

இடைக்காலத்திருந்த மக்களுள் ஒழுக்கச் சீர்திருத்தஞ் செய்யப் புகுந்த ஆரியரும் சமணரும் அறத்தால் பெறும் இன்பம் தவிர மற்ற இன்பங்கள் தவிர்க்கவேண்டியதென்றும் இசை நாடகங்களால் அறிவினுமிக்க சிற்றின்பம் விளைவிக்கிறதென்றும் எண்ணி இசைத் தமிழ் நூற்களையும் நாடகத் தமிழ் நூற்களையும் ஒருங்கே நாசஞ்செய்தார்களாம். இவர்கள் இன்னிசையால் பக்தி வழிக்குண்டாகும் பலனை அறியாதவர்கள். கிறிஸ்து இரக்ஷகனை வழிபடும் தமிழ்ச் சபைகளிலும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக காலக்ஷேபங்களை நாடகங்களை விசேஷமாய் வழங்காததற்குக் காரணம் மேற்கூறிய ஆரிய சமணர் செய்த பெரும்பிழை யொத்ததாகும். தற்காலத்தில் அவைகள் உயிரடையக்காண்பது மிக்க சந்தோஷமே. ஸ்ரீமான்கள் அய்யாதுரை, வேதநாயகம், சிம்ஸன், தெய்வசிகாமணி,



ஸ்டீவன், பாப்லி பாகவதர்கள் புறதேச சபைகளிலும் போய் உழைத்துவருவதை அறிந்து மகிழுகிறோம். சுதேச முயற்சியாக்கும். சுபம்!

ஆத்தும ஆதாயமாக்கக்கூடிய போதனைக்கிடமான சங்கீத காலக்ஷேபங்களை விர்த்திக்குக் கொண்டுவருவோமாக. பக்த சிரோன்மணியாகிய பவுல் அப்போஸ்தலன் எபே. 5: 11-ல் சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள் என்றார். இம்முறையினால் இருதயம் பிளவுகொள்ளாமல் பழுக்கக் காய்ச்சின ஆணியைப்போல் சத்தியத்தை உள்ளத்தில் இறக்கலாம். சங்கீதத்தால் இருதயத்தையுருக்கி சத்தியத்தை நன்றாக பதிப்பிக்கலாம் என்பதும் பொருத்தமாம். பழமொழிகளும் சூத்திரங்களும் இம்முறையினால்தான் எத்தர்க்கத்திலும் மேம்பாடடைகின்றன. எனினும் காலக்ஷேபங்கள் நடத்தவும் கேட்கவும் விரும்புகிறவர்கள் F. W. Robertson என்னும் ஆங்கிலேய பக்தன் கூறியதை மறக்கவொண்ணாது. யாதெனில் 'The World which is Faith's antagonist has laid its cludgeon and all its apparatus of torture and intimidation and has taken up instead flute, sackbut, psaltery and all kinds of music to soothe conscience and allure along the flowery path of inglorious ease to sunless gulfs of ignominous death. ஆகவே பாகவதர்கள் சங்கீத சமர்த்தராயும் போதக சமர்த்தராயும் மாத்திரமிருந்தால் போதாது. தேவ அன்பில் ஆழ்ந்த ஆழ்வார்களாயிருக்கவேண்டுமென்பது தெளிவாகிறது.

நான் வெளியிடும் இந்நூலைப்பற்றி பாயிரத்தில் குறித்ததுடன் சில வார்த்தைகள் கூட்டுவது அவசியம். நான் பணிவிடை செய்து வரும் மைலாபூர் சபையாருக்கு ஒருவர் காலக்ஷேபம் நடத்துவதாக வாக்களித்து தவறிவிட்டதினால் சபை ஏமாறாத வண்ணம் நானாவது ஒன்று நடத்த மைலாபூர் சுவிசேஷபடை என்னை ஏவினார்கள். அதற்கு இணங்கி இந்த சிரோபேனீக்யாளின் சரிதையை தயார் செய்தேன். இப்பேர்ப்பட்ட அற்ப உற்பத்தியையுடைய இச்சிறு நூலில் பல பிழைகள் காணலாம். பெரியோரானவர்கள்,

குணநாடிக் குற்றமுநாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்—என்ற

நாயனார் திருமொழியை என் விஷயத்திலும் பெரிது பாராட்ட வேண்டுகிறேன்.

இந்த சரித்திரத்தைப் பற்றி Dr. Morrison என்பவர் 'The miracle is interesting as one of the rare cases in which the ministrations of Christ were extended to a pure heathen. It is one of few preludes of the larger mercy which was in store, first drops of that gracious shower which should one day water the whole Earth' என்றார்.

நமது குரு அவதாரரின் திருவிளையாட்டையொத்த இச்சரித்திற்கு பகவத் பரீக்ஷை—நீதிமதி சரித்திரம் என இரு நாமங்கள் சூட்டப்பட்டது. இரக்ஷகர் அவள் விசுவாசத்தைப் பரீக்ஷிக்க அவளும் அவருக்கு கிருபை உண்டோ என்று பரீக்ஷிக்கிறதால் பகவத் பரீக்ஷை என்றேன். பாரம்பரையான சரித்திரத்தில் Justa என்றும் அவள் மகளுக்கு Bernice என்றும் வழங்குவது முறையே நீதிமதி ஜெயசீலி என்றும் மொழிபெயர்க்கப்பட்டது.

இந்நூலின் சம்பந்தமாய் உதவிபுரிந்த நண்பர் கனம். ஆபிரகாம் பண்டிதர், Violinist சாமுவேல் லாலி, கனம். ஜெபமணி இஸ்ரவேல், கனம். ஸ்டீவன் ராஜாராவ், சங்கை T. S. ஒய்ட்டின் ஐயர், கனம். தரங்கை N. சாமுவேல் ஐயர் முதலானோர்க்கு வந்தனம்.

**N. B.**—*This book is presented as a souvenir of the* **armistice** *of the* **World-war.** *My special thanks are due to the many friends who contributed liberally towards the cost of printing.*

எல்லாவற்றிற்குமெல்லாமுமான எம்பிரான் இயேசு இரக்ஷகனுக்கே எல்லா கனமும் மகிமையும் உண்டாவதாக.

மைலாப்பூர்,
25-12-1918.

மே. சா.

## சரித்திர வரலாறு.

---

மனுமக்களின் ஆன்ம ஈடேற்றத்திற்கென்று அவதாரம் பூண்ட இயேசுகிறிஸ்து என்ற தேவ மனிதன் கெனெசரேத் ஊரில் போதித்தபின்பு அவ்விடம் விட்டு புறப்பட்டு தீரு சீதோன எல்லைகளில் போய் அங்கே ஒரு வீட்டுக்குள் பிரவேசித்து அதை ஒருவரும் அறியாதிருக்க விரும்பினார். விரும்பியும் அவர் மறைவாயிருக்கக் கூடாமற்போயிற்று. எப்படியெனில் அத்திசைகளில் குடியிருக்கிற கானானிய ஸ்திரிகளில் ஒருத்தி அவரைக்குறித்துக் கேள்விப்பட நேரிட்டது. அவள் சிரோபேனீக்கியா தேசத்தாளாகிய கிரேக்க ஸ்திரியுமாயிருந்தாள். அவளுக்கிருந்த ஒரு சிறு பெண் அசுத்த ஆவியினால் பிடிப்பட்டு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்ததால் அவள் கேள்விப்பட்டவுடனே அவரிடம் ஓடிவந்து 'ஆண்டவனே, தாவீதின் குமாரனே எனக்கிரங்கும் என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் அப்பிசாசைத் துரத்திவிட வேண்டுமென்று உரத்த சத்தமாய் கூப்பிட்டுச் சொன்னாள். அவரோ அவளுக்கு பிரதியுத்தரமாக ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. இதைக்கண்ட சீஷர்கள் அவரிடம் வந்து, ரபீ! இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறாளே, இவளை அனுப்பிவிடும் என்று வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அவர் நான் காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனே அன்றி, மற்றப்படி அல்ல என்றார். இதைக் கேட்ட அந்த ஸ்திரி அவர் முன்பாக ஓடி அவருடைய பாதத்தில் விழுந்து 'ஆண்டவனே எனக்கு உதவி செய்யும்' என்று பணிந்துகொண்டாள். அவரோ அவளை நோக்கி 'முந்தி பிள்ளைகள் திருப்தியடையட்டும். பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு போடுவது நல்லதல்ல' என்றார். அதற்கு அவள் மெய்தான் ஆண்டவரே ஆகிலும் நாய்க்குட்டிகள் எஜமான்களுடைய மேஜையின் கீழிருந்து கொண்டு அவர்கள் சிந்துகிற துணிக்கைகளைத் தின்னுமே என்றாள். இரக்ஷகர் அவள் கொடுத்த மறுமொழியைக்கேட்டு வியந்து அவளை நோக்கி உன் விசுவாசம் பெரிது. நீ சொன்ன அந்த வார்த்தையி

ரிவித்துப் போகலாம். நீ விரும்புகிறது உனக்கு ஆகக்கடவது. பிசாசு உன் மகளை விட்டு நீங்கிப்போயிற்று என்றார். அவள் வீட்டுக்கு வந்தபோது அவர் சொன்ன நேரமே பிசாசு மகளை விட்டு போய்விட்டதையும் மகள் ஆரோக்கியமாக கட்டிலில் படுத்திருக்கிறதையும் கண்டாள். [மத். 15: 21-28, மாற். 7. 24-30.]

# அடக்கம்.


## I. பாயிரம்.

1. பரமபிதா தோத்ரம்.
2. நூற்பெருமை, அவை அடக்கம்
3. மங்கள துதி

## II. துயர் காண்டம்.

1. குருபரன் எழுச்சி
2. நீதிமதி ஜெயசீலியினிமித்தம் இரங்கல்
3. குருபரனைக்குறித்து கேள்விப்படல்
4. நீதிமதி தேறுதலடைதல்
5. நீதிமதியின் பிரயாணம்
6. குருபரன் ஆஞ்ஞாபனை
7. நீதிமதி குருபரனைத் தரிசித்தல்

## III. பரீக்ஷை காண்டம்.

1. குருபரனை வேண்டல்
2. சீஷர்கள் பிரமிப்பு
3. சீஷர்கள் பரிந்துபேசுதல்
4. குருபரன் கொடுத்த மறுமொழி
5. நீதிமதி தெண்டனிடல்
6. குருபரன் பிரதியுத்தரம்
7. நீதிமதி வாதாடுதல்
8. குருபரன் ஆசிகூறல்
9. நீதிமதியின் வெற்றி
10. குருபரனை நமஸ்கரித்தல்
11. குருபரன் நீதிமதியை மெச்சுதல்

12. குருபரனை சீஷர்கள் மெச்சுதல்
13. மதுபானம் 14. ஜாதிபேதம்

## IV. மங்கள காண்டம்.

1. ஸ்ரீமதி வீட்டுக்குத் திரும்புதல்
2. கூடிப்பிரயாணம்
3. ஜெயசீலியைச் சாறுதல்.
4. குருபரனை நினைத்துப் போற்றுதல்
5. அயலகத்தாருக்கு விளம்பரம் செய்தல்
6. மங்களம்

## V. முடிவுரை.

ஆக்கியோன் துதி
ஜெய சங்கீதம்

# TABLE OF APPROPRIATE TUNES FROM THE CHURCH LYRIC BOOK.

| | ப. ப. கீர்த்தனைகள். | சபை கீகத்தனை புத்தகத்தில் ஒத்த கீர்த்தனைகள். |
|---|---|---|
| | II. | |
| 1 | எழுந்தானே சுதன் | பாருங்கள் தொடர்ந்து (old) |
| 2 | ஆரிடத்தினில் ஏகுவேன் | ஆரிடத்தினில் ஏகுவோம் |
| 3 | கவலை கொண்டேங்கி | தூய்ய திரு பாலனே |
| 6 | மாசிலனே மறைவிடம் | யேசு நசரேயன திபதியே |
| | III. | |
| 2 | நமர்காள் நலம் என | பாவி மனதுருகே |
| 3 | இன்ப ஆசீர் கூற | தேனினிமை அதிலும் |
| 4 | செப்புவேன் கேளீர் | எப்படியும் பாவிகளே |
| 7 | நலமுறைத்தீர் | பாவியாம் என்மேவி |
| 10 | தோத்ரம் தோத்ரமையா | நம்பிவந்தேன் மேசையா |
| 11 | உறுதி விஸ்வாஸம் | எத்தனை திரள் என் |
| | IV. | |
| 1 | சென்றாள் சிநேகன் | பின்னாள் சீக்கிரம் வர |
| | V. | |
| | ஆனந்தசாகரா | யாவேனும் எனதரசே |

## பாயிரம்

### வெண்பா.

ஆதித் திருச்சதகனன்றே யாசிரளித்த
நீதிமதி சரிதை நுவல்வேன் யான்—சோதிபரா
உற்றவர்க்கு நீயல்லா லுடையவ னென்பானே து
நற்றாய் நீ யொன்றே துணை.

1.

## INVOCATION.

### பரம பிதா ஸ்தோத்ரம்.

கல்யாணி. **பல்லவி.** ஆதி.

துணைமிகவே புரிவாய்—தாயத்திரியேகா
துணைமிகவே புரிவாய்.

**அநுபல்லவி.**

தினை உனைநான் நாட தூய சபையார் கூட
இணையில் நின் கழல் சூட இசைவா யிங்கேரம் பாட. துணை.

**சரணம்.**

1

ஆதி அபிராமை அழைத்தாய்—அவர்க்கு வேண்டிய
அவசியமெல்லாம் அளித்தாய்
நீதிப் பிரமாணம் கொடுத்தாய்—நியாயப்படி
நினை யழைத்தோரை அடுத்தாய்
நீதிமதியில் கண்ட நீதிமதியைச் சொல்ல
சோதிபரனே உன்னைச் சேவித்தோனுக்கு நல்ல. துணை.

2

மூன்று மொன்றான முடிவா—மூலகாரண
மொழி முதலான வடிவா
தோன்றின தோன்றலே தேவா—திருமகளுய்த்
துலங்கும் தாயனே எம்கோவா
சான்றோர் பலர் சபைக்கு சங்கீதம் பாடவைத்தாய்
ஆன்றோனில்லா னெனையே அறிவுடன் பாடவைப்பாய். துணை.

3

மோசம் முற்றுமே தவிர்ப்பாய்—மோசேக்கு ஈந்த
முகப்பிரசன்ன மளிப்பாய்
தோஷம் யாவையும் க்ஷமிப்பாய்—தாவீது பெற்ற
தூய பாக்யத்தைக் கொடுப்பாய்
மேவுதாக் சாலமோன் பாடல் மேலோர்களும் மதிக்க
மேஷமானவனே* உந்தன் மேன்மையையே துதிக்க துணை.

---

* ஆட்டுக்குட்டியானவர்.





2.

## THE EXCELLENCE OF THE STORY AND THE AUTHOR'S PLEA.

### நூற்பெருமை, அவையடக்கம்.

தன்யாசி. **பல்லவி.** அடதாளம்.

அற்புதவதாரன் செய்த ஓர் அற்புதம்
அற்பன் சொல்வேன் கேளீர்.

**அநுபல்லவி.**

மெய்ப்பரன் யேசுக்கிறிஸ்தென்னும் நேசன்
மேசியா வானப் புனித உல்லாசன்
அற்பனென் றென்றுமோர் சீதோளி யாளுக்கு
அக்கறை மிக்கவோர் காருணியாளுக்கு. அற்.

**சரணங்கள்.**

1. நீணிலத்தில் நீதிமதியின் சரித்திரம்
நீடிக்கக் கேட்டால் போம் துன்பம்
ஆணிமுத்துக்கள்போல் அதிலிருக்கும் சத்யம்
அடைந்தவர்க்கே வரும் இன்பம்
காணில் அதிலுண்டு மெய்வேத சாஸ்திரம்
கற்பதற்கும் அதிலே ஜெப சூஸ்திரம்
வேதுனுமட்டும் சொல்ல நானும் எம் மாத்திரம்
வேதநாயகருக்கே தோத்ரம் தோத்திரம். அற்.

2. காவியமும் பஞ்ச லக்ஷணமும் நன்றாய்
கற்கா என் கேவலம் காணீர்
ஆவியினு வனைச்சொல்லும் முழுச்சொல்லாய்
ஆக்கிவைத்தேன் இதோ பாரீர்
பூவோடு கூடிய நாரும் மணம் பெறும்
பொற்பாதன் யேசுவை யண்டில் மேனிதரும்
நாவின் இறைவ தாயாவினும் வரும்
நாவலன் அல்லேன் என் நாவின் பிழை பொறும். அற்.

3.

## PRAISE.

## மங்கள துதி.

மோகனம். பல்லவி. ஆதி.

எழு லக்ஷண தேவா—நமோ, நமோ—சீயோன்
எழில் மன்னா நற்தேவா—நமோ நமோ.

அநுபல்லவி.

ஏழைக்கிரங்கும் யோவா எங்கும் நிறை யோகேசா
பேழை யான எம் ஜீவா—நமோ நமோ. ஏழு.

சரணங்கள்.

1. மங்களமே சொரூபா—நமோ; நமோ—மா
மகிமையான அரூபா—நமோ, நமோ
பங்கமிலா நிருபா பாதகர்க்கும் கிருபா
சங்கைக்குரிய பூபா—நமோ, நமோ. ஏழு.

2. காட்சிக்கொடுத்தவனே—நமோ, நமோ—எங்கள்
கண்மணி யானவனே—நமோ, நமோ
சாட்சிப்பகர்ந்தவனே சத்து சித்தானவனே
மோட்சம் திறந்தவனே,—நமோ, நமோ. ஏழு

3. * சுந்தர சிங்கின் மித்ரா—நமோ, நமோ—ஜெக
ருக்ஷ்மதேவனின் புத்ரா—நமோ, நமோ
விந்தை தாவீது கோத்ரா விண் மண் மகிமைப்பாத்ரா
சிந்தையைக் காக்கும் நேத்ரா—நமோ, நமோ. ஏழு.

பாயிரம் முற்றிற்று.

* சாது சுந்தர் சிங்.



## துயர் காண்டம்.

### விருத்தம்.

மலையாழம் வளம்பெருகும் பெனீக்யாவில்
மாதொருத்தி பேய்பிடித்தே ஓய்வில்லாமல்
வலைபாய்ந்த கலை போலும் அலை யிலை போலும்
வருந்தியதா லவள் தாயும் சகியாதிருக்க
தொலைபடு மெய்ப்பேயுமே தாவீது புத்ரனுள்
துரையேசு கோமேதகம்மெனக் கேட்டு
நிலைபெயர்ந்து திருஎல்லை வந்தோரண்டை
நீதிமதி *கவிரம்போ லோடினாளே.

* ஜென் மயில்.

## 1.

### "AND HE AROSE FROM THENCE"

### குருபரன் எழுச்சி.

செஞ்சுருட்டி. பல்லவி. ஆதி.

எழுந்தானே சுதன் மேல் எழில் சீயோன் திரு நோக்கி
எழுந்தான் ஏசையனே.

அநுபல்லவி.

எழுந்தானே தேவ புத்ரன் இறைவன் தாவீது கோத்ரன்
தொழும்பர் சிஷரை இட்டு தொழில் கனேசரேத் விட்டு. எழு.

சரணங்கள்.

1. வானுதி வானவனின் வளம் பெறும் குமரேசன்
வகை வகையாய் வான்சேனை வலம் வரும் புகழ் ராசன்
தானுய்த் தெரிந்த குலத் தன்னயப் பரிசேயன்
தமை வெறுத்ததால் மனம் தளர்ந்ததால் மரிசேயன். எழு.

2. அறநெறி விட்டொழுகும் அகப்பற்றோரையே நீண்டி [1]
அயல் குலத்தாரும் அன்பால் அவர்பதம் சேர்க்க வேண்டி
திறம் மிகும் கல்விமேயா நெறிபூத எல்லைத் தாண்டி
நிழல்பொருளான மைந்தன் பிலேபெயர்வதை காண்டார். எழு.

3. குரு உருவங் கொண்டே நீக்குணமதைப் பெருக்கவே
குவலயத்தின் பேயின் தீக்குணமதை அழிக்கவே
இருகரு மக்கள் [2]சென்றுய் இதயத்தில் ஜொலிக்கவே
இதை அருஞ்சீஷருக்கே இதமதாய் போதிக்கவே. எழு.

---

1 மத் 15: 1-20.
2 தேடி, ரக்ஷிக்க seek & save.





## 2.

### 'VEXED WITH DEVIL'

### ஜெயசீலியினிமித்தம் நீதிமதி இரங்கல்

தேசிகத்தோடி பல்லவி. ஆதி.

ஆரிடத்தினில் ஏகுவேன் — இவ்வாதை நீங்க
ஆரிடத்தினில் ஏகுவேன்.

அநுபல்லவி.

ஆரிடத்தில் ஏகுவேன் அவனியில் யார் தானுண்டு
பாரிலெனக்கோர் பெண் படுகிறாளே பேய் பிடித்தே. ஆரி.

சரணங்கள்.

1. பாகால் அஸ்தரோத் பணிந்தேன் — பசாசைப்போக்க
பான பலிகள் படைத்தேன்
ஆகாமற் போனதினால் அலறுகிறாளே இனம்
சாகா பிழைக்க ஒரு சஞ்சீவியைக் காணேனே. ஆரி.

2. பலவகைப் பார்த்தும் பரமே! — பசாசின் கோஷ்டம்
பலப்படுதே என் செய்வேன்
அலகையோ அலகெனின் அகங்காரமோ அறியேன்
புல மறியேனே மகள் புடை படுகிறாள் ஐயோ ஆரி.

3. பாவியிற் பாவி நானல்லோ — என் பாவத்தால் [illegible]
ராவி பிடித்து வாட்டுதோ
மேவி என்னை ரக்ஷிக்க மேலான தேவன் [illegible]
தாவி பிடித்தே கொள்வேன் தாங்க கூடவில்லையே. ஆரி.

116720

## 3.

### HEARS OF JESUS.

### குருபரனைக் குறித்து சிநேகிதி மூலமாய் கேள்விப்படல்.

ஜங்காரதுவனி. திபதை ஆதி.

சிநே—கவலை கொண்டேங்கி மனம் காய்வதேன் கேள்—அடீ
கவலை நீக்கயேசென்போன்—கர்த்தன் ஒன்றே.

நீதி—யேசு என்போர் யாரோ எந்தன் நேசியே சொல்—அடீ
பாசமும் பாராட்டுவாரோ—நீசளாச்சே.

சிநே—கோத்திரம் தாவீதாம் ஏசு கர்த்தன் அவர்—அடீ
நேத்திரம்போல் காத்துக்கொள்வார்—நேர்த்தியாக.

நீதி—தாவீது கோத்ரமென்றாய் அத்தன்மை போமோ—அடீ
பாவி குலமாச்சே நம்மேல்—மேவுவாரோ.

சிநே—அச்சமேன் என் வாத்தையே அச்சாரமாமே—அடீ
பட்சமாய் பதிலளிப்பார்—நிச்சயமாக.

2

கல்விலே யூதேயா எங்கும் கண்டபோதே—அடீ
வல்ல பேய் விரைந்தோடிற்றும்—சொல்லிறேமே

3

நம்முடைய எல்லைவந்தார் நல்ல செய்தி—அடீ
தம்மிடம் போவார்க்கே சுகம்—நம்பி போனால்

4

நீயுமோடேன் நின்மகட்காய் நீதிமதி—அடீ
பேயுமே விட்டோடிப்போமே—வாயு போல. கவலை.

---



## 4.

### ENCOURAGED.

### நீதிமதி திடனடைதல்.

ஸ்ரீராகம். ரூபகம்.

பல்லவி.

அம்மணீ ! இதை யறிந்தேன் போதும்
அம்மெனு முனே அவரிடம் போவேன்.

அநுபல்லவி.

நம்பன் தாவீது புத்ரனாயினும்
நாடி மன்றாடுவேன் அவர்கடாட்சம். அம்.

சரணங்கள்.

1. ஓயாக் கொடிய பேயால் வரும்
நோயால் வதை போதண்டீ
ஓர் வார்த்தை யாலோடும் பே யென்றால்
உடனேவேனே உனை நம்புவனே
உம்பரனே துணை. அம்.

2. முன்னாள் நமது முன்னோர் விளைத்த
தென்றோ இக்கொடிய தீதடீ
முன் என் பாவமோ முழுதும் வாட்டுது
முனை நானறிந்தால் முடிவாய் விடுமே
மூவுல கோன் துணை. அம்.

5.

'STRAIGHTWAY.'

## நீதிமதி வழிப்பிரயாணத்தில்

ஜங்காரத்துவனி. திரிபுடை.

1

என்ன செய்வேன் சாமி—எனக்—காருதவி இப்பாரில்
சொன்ன சொல்லை நம்பி—நான் போகிறேன், ஓ நம்பி!

2

எல்லை வந்தாரென்றான்—அதை—எண்ணியே நான் போறேன்
தொல்லை நீங்குமென்றான்—அத்—துரை அவரைக் கண்டால்.

3

கண்டால் விடுவேனோ—அக்—கர்த்தன் ஏசென்போரை
பெண்டாகிலும் சண்டை—நான்—போடுவேன் அவரண்டை.

4

காணுணியன் நானே—எனக்—கானவராய்க் காணேன்
சீனாய் மலையோனே!—மகள்—சீராயாக்குவோனே.

5

பாரில் எனைப் போல—ஓர்—பாதகியார் உண்டோ
யாரிடம் போய் சொல்வேன்—உன்—பார்வையால்தான் உய்வேன்.





6.

'WOULD HAVE NO MAN KNEW IT.'

## 'தம்மை ஒருவருமறியாதிருக்க விரும்பினர்.'

தோடி. ஆதி.

பல்லவி.

மாசிலனே மறைவிடந்தேடினரோ—இதின்
மாட்சிமை யறிகிலேம்.

அநுபல்லவி.

தேசிகனு மெங்கெங்குந் திரிந்திட்ட ஏசன்
திருசேதோன் எல்லையோர் வீட்டினில் புக்கி. மா.

சரணங்கள்.

1. மலர் மனோரஞ்சிதத்தின் மணம் பரவாது
மதிவிட மானிடர் மனங் கொண்டாலாமோ
அலர் கதிரோனை யோர் அகங்கையால் மூடி
அதி ஒளி பரவாமல் அடக்கிடலாமோ. மா

2. அன்று தேவச்சபையில் அளித்த ஓர் வாக்கை
ஆருயிரீந்து மீட்க அவதரித்தோனே
இன்று மறைந்திருக்க இடமிது வானால்
இடர் தவிர்க்கவோ என்ன! இது முறைதானோ. ம

3. நார் பல பிணி போக நாள் விடாதுழைத்தே
நடையு மிகுதியாகி நாடினரிளைப்போ
இரவு பகலென்றும விடைவிடா ஜெயிப்போன்
இங்கு மறைக் கையாட எழுந்தது நினைப்போ. ம

## 7.

## SHE SAW.
## குருபரனைத் தரிசித்தல்.

சஹானா. சாப்பு.

### பல்லவி.

கண்டாள் கண்டாள் கற்பக வள்ளலை
கருணை வாரிதியைக் கண்டாள்.

### அநுபல்லவி.

அண்டர் குழப்போற்றும் பத்ராசனனை ஈசனை
தொண்டருக்குத் தொண்டனாய்த் துலங்கும் தூய நேசனை.

### சரணங்கள்.

1. ஆதி ஞானமே வாக்காய் அமைந்து நற்குருவாக்காய்
அவதரித்தவனைக் கண்டாள்
நீதி மெய்ப்பரிசுத்தம் நீணிலத்தினில் நாட்டும்
நித்ய குமாரனைக் கண்டாள்
மாது மரியாள் பெற்ற மரகதப்பாதனை
சாது நிறைந்தோனைச் சச்சிதானந்தனைக். கண்.

2. பேசருந்தெருளானைப் பிரணவப் பொருளானை
யேசெனும் நாமனைக் கண்டாள்
மோசே முனிவர் தீர்க்கர் முன்னுரைத்த மருளன்
மேசியாவையுமே கண்டாள்
பாசமொன்றையே பற்றி பலமகிமை விட்டோனை
நேசவடிவுள்ளோனை நித்ய ஜீவனைக் கோனைக். கண்.

3. பெற்ற மகள் பிணியாள் பேதலித்துப்பின்க்கப்
பட்டமனத்தாளே கண்டாள்
உற்ற கணவன் ஓயாக் கட்குடியனின் வாதைக்
கொத்த மனத்தாளே கண்டாள்
முற்றும் கடுவழியே முழுதும் ஓடிவந்தவள்
சற்று மினைப்புத் தோன்றாள் சண்பகமலர்போல் வாள். கண்.

---

துயர் காண்டம் முற்றிற்று.



## பரீக்ஷை காண்டம்.

### விருத்தம்.

அன்பேயுருவா யவதரித்தோ னவளழுகுரல் கேட்
டன்பேயிலர்போ லசட்டை செய்வார்போ லமைந்ததனுல்
முன்பேவிரைத்தாள் முழுதும் பணிந்து முறை பேசிடு
துன்பேயோடவே யதொன்றுரைத்தார் நம் தூயவனே.

## 1.

### SHE CRIED AFTER JESUS.

### நீதிமதி குருபரனை வேண்டல்.

கமாஸ். மிஸ்ரசாபு தாளம்.

பல்லவி.

தருணமிரங்கிப் பாரையா—தாவீதின் மைந்தா!
தருணமிரங்கிப் பாரையா.

சரணங்கள்.

1. தருணம் கடாக்ஷிப்பாயே—தயையில் மீனாக்ஷி* நீயே
அருமை என் மகள் பேயால்—அவதிப்படுகிறாளே. தரு.

2. வேதனையோ கொடிது—விலக்க வகை அறிது
நாதா உனை கதியாய்—நம்பி ஓடிவந்தேனே. தரு.

3. பாதகி எனைப்பாரும்—பாவி கூக்குரல் கேளும்
ஆதரவு நீ என்றே—ஆண்டவனே! வந்தேனே தரு.

* மீன்கண்—அருட்பார்வை.





## 2.

### THE SILENCE OF JESUS.

### சீஷர்களின் பிரமிப்பு.

பியாகு. ஆதி.

பல்லவி.

நமர்காள்! நலமெனமோ

அநுபல்லவி.

நம்மாண்வார் இம்மாட்டும் சும்மா இருப்பதேனோ. நமர்.

சரணங்கள்.

1
மாதொருத்தி தன் மகள் பிணிபோக
மாதுயர் குரல் போட்டும்—நம்
கோதில்லா குணத்தானிப்போ சாதுவாயிருப்பதேனோ. நமர்.

2
அன்று கானாவில் ஓர் ஆள் அவன் மகனுக்காய்
மன்றாடிய பொழுதும்—இவர்
போ போ பிழைத்தானெனவே நோகாபிழைத்தானல்லவோ. நமர்.

3
நாயீன் நாகூம் நங்கைமார் பெற்ற
வாய்மொழி வழங்கலாமே—மா
வல்லமை வருத்தமனம் கல்லெனக் கடினமாச்சோ. நமர்.

4
குஷ்டமோ திமிரோ குருடோ கூன் செவிடோ
துஷ்டாவி பட்டவரோ—ஒரு
சொற்படிச் சுகமடைய நற்பரன் செய்யக் கண்டோமே. நமர்.

5
*கோத்திர மகிமை வைராக்கியம் பிறந்தே
கோரமாயிருக்கிறாரோ—இப்படிக்
கொத்த வித்தியாச மெங்கும் வித்தகன் செய்யக் காணோமே. நமர்.

6
இரு சற்றே பார்ப்போம் இத்திரு விளையாட்டை
குரு அவதாரக் கூத்தை—பரி
சுத்தரே நம் ரபி என்று எத்திசையறியுமல்லோ. நமர்.

*ஜாதிபேதம். 14-ம் கீர்த்தனை.

## 3.

### DESCIPLES PLEAD FOR NEETHIMATHY.

### நீதிமதிக்காகப் பரிந்துபேசுதல்.

சங்கராபரணம். அடதாளம்.

பல்லவி.

இன்ப ஆசீர் கூறவாய்—இவளைப்பார்த்து
இகபர வரமளிபா !

அநுபல்லவி.

துன்பக்கடலில் மூழ்கி தூக்க விரும்பிக் கூவும்
அன்பரே ! இவள் குரல் அதிகரிக்குதே நம்பின். இன்.

சரணங்கள்.

1. நாடினீர் நற்றினைப்பே—நாங்களென் செய்வோம்
நம்பி வாரார் ஒருங்கே
ஓடி வந்தாளே இவள் உயிரிழந்தாப்போல் பாவம்
வாடிப் போவாளே வந்தும் வரம்பெறுவிடில் வரதா! இன்.

2. நாயின் விதவைக்கல்லவா—நன்மை செய்தீர் இந்
நங்கைக்கும் நல்கலாமே
தாயிவள் மகள் பேயை தவிர்க்க வகை காணுதாள்
வாயொரு மொழி சொன்னால் வந்த வழி போவாளே. இன்.

3. போம் போய்விட்டது எனல்போல்—புண்ணிய புத்ரா !
பொன்னுரை போழ்துரைப்பீர்
நாம ரூபியாச்சே நீர் நன்மை நித்ய வடிவாச்சே
தாமதமேன் ரபூனி ! தயவாயிரங்கிப்போது இன்.





## 4.

### JESUS REPLIES HIS DESCIPLES.

### குருபரன் சிஷரைப்பார்த்து உரைத்தல்.

காம்போதி. ஆதி.

பல்லவி.

செப்புவேன் கேளீர் சிஷரே எப்படியும் இஸ்ரவேலர்
துப்புற மீட்கவே வந்தேன் இப்புவியிலே.

அநுபல்லவி.

மெய்ப்பரன் மேலோன் மகத்வன் மேசியன் குமாரனேனும்
கற்பனை வழுவலாமோ கற்புள்ள சீலரே சொல்லும்.

சரணங்கள்.

1. *கானானியளாச்சே அவள் கானானே தூர்காமின் வம்சம்
மேலுளவன் பெற்ற சாபம்[1] மேலோர் நானுவார்
காணமற்போன ஆடுகள் கள இசரேலைத் தேடி
பேணமலிருப்பேனோ நான் பேதலிப்பதேனோ சும்மா. செப்.

2. தவீது புத்ரனென்றுனே தாவீது குமாரனானேல்
தவீது கோத்ர தன்மைக்கு உதவ வேண்டாமோ
புவியைப்புரக்க வேண்டி புனித யூதா கோத்ரமே
தவிலவும்மாணலாமோ நங்கைக்காய் நயந்தோரே நான். செப்.

---

[1] மதுபானத்தைப்பற்றி 13-ம் கீர்த்தனை.

*It is difficult to resist the impression that Canaan was not only the focus of ancient heathenism in its worst abominations but the centre from which it spread. Very much of the mythology, and almost all the vileness of Greek and Roman heathenism is undoubtedly of Canaanistish origin. Indeed we may designate the latter as *missionary* heathenism at that time in the world—Edershiem.

## 5.

### 'LORD HELP ME.'

### நீதிமதியின் கூப்பாடு.

முகாரி. ஆதி.

பல்லவி.

எப்படி விடுவேன் சுவாமி
அப்படி சொன்னலாகுமா.

அநுபல்லவி.

தப்பின ஆட்டைப் போலென்னை ஒப்பிட்டே உதவலாமே
ஒப்பில்லா மணியே! உந்தன் சொற்ப கிருபைக் காளாவிடில்.

சரணங்கள்.

1. நாதா உனைக் கேள்விப்பட்டே
நம்பியே ஓடி வந்தேனே
ஆதரவு உன்னையல்லால்
ஆறுதலளிப்பார் யாரோ
வேதாள வேதனை போக்க தாதா உனைத் தேடிவந்தேன்
பூதலம் புரக்க வந்த போதனே நின் பொற்பாதத்தை. எப்

2. கொற்றவா கைவிட்டாலெனக்
கொத்த உபகாரி காணேன்
மற்றவை பார்த்தேன் சற்றும்
மாறவில்லையே மகள்
முற்றிலும் நம்பிவந்தேனே பற்றின பற்றை விடேனே
பெற்ற தாய் என் மகள் பிணி முற்றிலும் விட்டோடாவிடில். எப்.

3. காறுனிய னென்றே மனம்
காய்ச்சல் கொள்வதேன் சுவாமி
ஆறுலென்ன ஆகாள் மெய்தான்
அருவருப்பு கொள்வீரோ
வானதி புத்ரா! இவ்வெல்லை தானாய் வந்ததே எம் பாக்யம்
தானாய் கிடைத்ததனத்தை வீணாய் இழப்பேனோ மாட்டேன். எப்.

---





## 6.

### JESUS TURNS TO HER.

### குருபரன் மறுமொழி.

சங்கராபரணம். ஆதி.

பல்லவி.

மடமாதே மயங்காதே
இடமானல் இயம்பாய்.

சரணங்கள்.

1. ஆடுகளாம் இஸ்ரேல் ஆயன் தேவதயவால்
நாடு வளம் முதலாய் நன்மை பெற்றாரே மட

2. காணாபோன் ஆடுகள் கனத்த இஸ்ரவேலென்று
வீணாய் நான் சொன்னதாக விசனம் வேண்டாம். மட.

3. வானதியன புத்ரராய் வசமாயிருந்த இஸ்ரேல்
காறுனியர் வசத்தால் காடேகினாரே. மட.

4. பிள்ளைகள் அப்பத்தை யாரும் பிள்ளைக்குக் கொடுப்பாரன்றோ
தள்ளியே நாய் குட்டிகட்கு தந்தால் தகுமோ. மட.

5. முந்தி பிள்ளைகளுக்கே முழு பசியாற்றல் வேண்டும்
பந்தி போஜனத்தை நாய்க்கு பங்கிடுவாரோ. மட.

---

7.

## 'YES LORD...........'

## நீதிமதியின் தர்க்கம்.

வசந்த பைரவி. அடதாளம்.

கண்ணிகள்.

1. கலமுறைத்தீர் நசரேத்தூராரே—ஓ பக்தவற்சலா!
நவிலதையைசெய் நானும் உரைப்பேனே.

2. வள்ளலென்றே யான் வருந்திவந்தேனே—ஓ பக்தவற்சலா!
தள்ளலாகுமோ தவீது புத்ரனே.

3. பிள்ளைகள் உமக்கிஸ்ரவேலரோ—ஓ பக்தவற்சலா!
பிள்ளைகள்நாங்கள் பிச்சை நாயிற்கே.

4. வாயில் காக்கும் சுவாக்களானாலும்—ஓ பக்தவற்சலா!
வாய் விழும் துண்டு நாய்க்குச் சேராதோ.

5. எச்சிலாகிலும் மிச்சமானதே—ஓ பக்தவற்சலா!
பிச்சை போட்டிடும் புண்ணிய தேவா.

6. மனுதர்மமாச்சே மாமரிபாலா—ஓ பக்தவற்சலா!
மனுவைத்தள்ளீரோ மாமனுவேலா.





## 'O WOMAN, GREAT IS THY FAITH.'

## குருபரன் ஆசி கூறல்.

ஆதி.

பல்லவி.

நீ உரைத்த நுண்ணதம்—உன் மாறுத்தர விதம்.

சரணங்கள்.

1. ஸ்திரீ ஆகிலும் நீ தீய குலத்தாளேனும் நீ.
பிரியப்படவே புகன்றாய் ஸ்ரீமதி.

2. நானாவித நன்மை பெற்றோர் அறிவேன் நீ.
நீ தானாய் கணித்தாய் தகைரமணி.

3. உன் விஸ்வாசமே உலகோருக்கு அரிது நீ.
நின் விருப்பம் நிகழ் நீயே சுமதி.

4. போ மகளே போ போய்விட்டது மகள் பேய் நீ.
ஓ உன் மொழியே உசிதம் குணலக்ஷமி.

9.

## NEETHIMATHY WINS.

## நீதிமதி ஜெயமடைந்தாள்.

தர்பார். சாப்பு.

### பல்லவி.

வெற்றி கொண்டாள்—வீரி அவள்
வெற்றி கொண்டாள்.

### அநுபல்லவி.

வேலன் ஜெகதோளனையே—வேதன் சுருளனையே.

### சரணங்கள்.

1. பெற்ற வனம்பை ஓர் விஸ்வாசத்தில் தோய்த்து
பேர் ஜெபதுரோணத்தால் தொடுத்தாள்—அது
சற்றும் பிசகாமல் சங்காரன் *மார்பினில்
சரேலென்று பாய விடுத்தாள்
முற்றும் சத்தானவனே
முதல் முடிவாம் ஆனவனே
மற்றுக் காருணியனே
மைவிழியாள் இரேக்கியனே. வெற்.

2. வானவாசலே ஓர் வானம்பாடி தொட்டு
வந்ததென்றால் நிஜமாமோ—அன்றி
ஆனதந்தையை கைமைந்தன் தள்ள அதால்
அலறி வீழ்ந்தானென்றுலாமோ
ஈனக் குலத்தாளவனே
இஸரேல் புறம்பானவனே
மோனக் குருவானவனே
மோக்கவழியானவனே. வெற்.

---

* ஆனந்தம் விளைவிப்போன்.





10.

## NEETHIMATHY THANKS THE LORD.

## நீதிமதி தோத்திரித்தல்.

பிலாவல் (இந்துஸ்தானி.) ஆதி.

1

ஸ்தோத்ரம் ஸ்தோத்ரமையா—திருவடிக்கே—தோத்ரம், தோத்ரமையா—ஓ
தவீது குமாரா! என்மேல் தயவு வைத்தாயே தோத்ரம்...மையா.

2

பாத்ரமிலாள் முகம் பார்த்தாய் அனுக்ரகம்—மகள்
படும் பாதை ஒழியச்சொல் புகன்றதே போதும் தோத்ரம்...மையா.

3

சத்துரு பேயினால் சக்கைபோலாயினள்—பேயின்
சகலவாதை பறக்க சரி வார்த்தை சொன்னாய் தோத்ரம்...மையா.

4

நாயின் கடையாள் நானே நம்பியே போவேனே—நான்
நவின்றதில் பிழையிருந்தால் க்ஷமிப்பீரோ தோத்ரம்...மையா.

## 11.

### JESUS PRAISES HER TO THE DESCIPLES.

### சீஷர்களுக்குப் போதனை.

தன்யாசி. ஆதி

**பல்லவி.**

உறுதி விஸ்வாஸம் உடையவனெவனும்
உண்மையாயடைவன் பயன்.

**அநுபல்லவி.**

கருதிய பொருளோ கர்த்தனின் அருளோ
பெறுவார் அறுதியில் பொருமையாய்க்காத்தால். உறுதி.

**சரணங்கள்.**

1. கானானியள் தானே கனிப்பொன்றுமில்லாள்
காட்டிய மாதிரி காண்
வானுதி வானவனும் வலிய விண்ணப்பத்தால்
தானும் அகப்படுவன் தைரியங் கொள்வீர். உறுதி.

2. கேட்பதும் தேடி தட்டுங்களென்றேன்
கேட்பதை மறவீரே
கேட்பதினாலல்லோ கிடைக்கும் விஸ்வாஸம்
ஏற்படுமே எளிதில் இறைவன் கைலாசம். உறுதி.

3. தடைதியிர்வாதனுக்கும் பர்திமேய்க்கும்
தகர்த்தார் வெளி தடையே
படைபோல் தடைகள் நானே படர்த்தினேன் பார்த்திர்
உடைத்திட்டாளே கொடியில் உயர்ந்தவள் அவளே. உறுதி.

4. உலகத்தை ஜெயிக்க உயர் விசுவாசம்
ஒன்றே என்றறிவீரே
பலவித மாயைகள் பலன் கொளா விடாதிர்
அலகுலகம் உங்களை அழுத்திட ஜெயிக்கும் உறுதி.





## 12.

### DISCIPLES PRAISE THEIR RABI.

### சீஷர்கள் ரபீயை மெச்சிக்கொள்ளுதல்.

பைரவி (சித்த.) கண்ணிகள். அடதாளம்

1. கண்டோம் கண்டோம் நம் ரபியின்
கற்பு நடத்தை கண்டோம்.
விண்டலத்தாரும் கண்டே வியப்புற
வித்தகன் செயலைக் கண்டோம்.

2. என்ன தப்பு நினைத்தோம்! அறியாமல்
எவ்விதமாய் உரைத்தோம்!
அன்னவள் கூச்சலினால் எவப்பட்டு
அலட்டினோம் வீண் அவரை.

3. அன்று கானான் மணத்தில் அவர் தாய்
அக்கறையாய் நமைப்போல்
மன்றாடியபோதும் ரபி சொன்ன
மாற்றுரையை நினைப்போம்.

4. கண்டார் கானானியள் இதயத்தில்
கனியும் விசுவாசத்தை
கண்டான் திருமேனி புதைந்த உள்
காருண்ய கமலமதை.

5. துண்டுக்காய் போராடி தூஷணிப்பை
துக்கமாய் கொள்ளாமல்
பண்டமுழுமையுமே பெற்றுக்கொண்டாள்
பாக்யவதி அவளே.

6. யேசியா என்றிவரை பல பல
விதங்களால் கனித்தோம்
வேசிமார்க்கத்தாருக்கும் வேண்டினதை
விருப்பமாய் செய்தாரே.

பரீக்ஷை காண்டம் முற்றிற்று.

13.

## DRINK.

### மதுபானம்.

ஆனந்தபைரவி. ஆதி.

பல்லவி.

பானம் மதுதான் வேண்டுமோ—பருகுதற்கு
பானம் ஜலம் தான் வேண்டாமோ.

அநுபல்லவி.

பானம் மதுவால் மகிழ்வாடல் குடித்தனம் பாழ்
மானம் போக உனை நீ ஈனப்படுத்துவதேன். பானம்.

சரணம்.

அத்தன் சொல்லே ஆதாரம் கொள்ளேன்
பித்தம் ஆக்கும் பிணி பொல்லாததென்று முற்றும் தள்ளேன்
சுத்த ஜலத்தாலல்லோ சுகம் சுவை பெலனுண்டு
சித்தமுண்டேல் உனக்கு நித்தம் இது போதாதோ. பானம்.

---

14.

## CASTE.

### ஜாதிபேதம்.

சரஸாங்கிப்பிரியா. ஆதி.

பல்லவி.

நீதியாமோ நேர் கிறிஸ்தோரே
நீதிவழுவா நீர் உரைப்பீரே.

அநுபல்லவி.

சோதிபிதா சொந்த புத்ரரென்றால்
சாதிபேதம் செய்யலாமோ சாற்றுவீரே. நீதி.

சரணம்.

வேதனை உண்டே வேற்றுமை கொள்வதால்
வேதாதாரம் விலம்புவீர் விம்பேன்
ஓதும் வேதம் உரைகல் அல்லவோ
காதன் யேசு காட்டினதே நல்வழி நேர். நீதி.

---





## மங்கள காண்டம்.

---

திருமகனி னொருவார்த்தை திருச்சேதானனின் செவித்
தேறச்சென்று
இருதயத்தில் மகிழுறிக்க இரு கரத்தால் கூப்பி தொழு
திட்டே ஏகி
1முருகனைக்காண் 2மூப்பனைப்போல் முழுமடிகொள்வற் சிலம்போல்
முடுக்கியோடி
திரு மகவாந் தன் மகவை யொருபேயு மலட்டாகற்
றெழுங்காய் கண்டாள்.

---

1. இளையோன் யோசேப்பு.
2. கிழவன் யாக்கோபு.

## 1.

## THE RETURN OF NEETHIMATHY.

## நீதிமதி திரும்பல்.

ஆனந்தபைரவி.* சாப்பு.

### பல்லவி.

சென்றாள் சீதோன் நோக்கியே சென்றாள்
நோக்கிச் சென்றாள்.

### அநுபல்லவி.

வென்ற ரக்ஷகன் சொல்லை நம்பியே சென்றாள். சென்.

### சரணங்கள்.

1

நீதிமதி என்ற பேர் சரியே—காணேன்
சாதிக் கொத்தாப்போல் இவளோர் நல்ல வியாபாரியே. சென்.

2

அதோ அவள் நாக்கித்த சார்போ—முன்
அதோனி பேசேக் பெற்ற அவநியின் நேர்போ. சென்.

3

சாவித்ரி சுசேயியாள் பிடிவாதம்—எ*
சாலுஜன் பிடிப்போன்றே அவள் கண்ட வேதம். சென்.

4

தன்னை தாழ்த்திக்கொண்ட ஓர் தன்மை—பேர்
அன்னைபோல் அவரிடம் பெற்றாள் பேர் நன்மை. சென்.

5

இரக்ஷிக்கும் முறை ஒன்று இதுவோ—பார்!
பக்ஷிக்கிறவனிடம் பக்ஷணம் இதுவோ. சென்.

* எசா தம்பி—யாக்கோபு.





## 2.

## 'ON HER WAY HOME'

## நீதிமதி திரும்புகையில் தனக்குள் வசனித்தல்.

### திருப்புகழ்.

1. மதிமுகங் கொண்ட மன்னவனே என்
மனக்குறை நீக்க வல்லவனே எந்தன்
விதி யொழியச்சொல் சொன்னவனே எனக்—
இருபோதும்.

2. அகம் வரவழைக்க ஆகாள் நான் என்
குலம் குணமில்லை அறிவேன் யான் என்
மகன் பிணி போமுல் போதாதோ எம்—
பெருமானே.

3. நாயென் றுரைத்த மொழி கேட்டு பெண்
நாஞென் றுரைத்தேன் அழகாமோ என்
வாயொன் றுரைக்க விதி தானோ இதை—
மறப்பாரோ.

4. எங்கள் குலமிப் பெயரடைய எங்கும்
சனப் பாகால் அஸ்தரோத்தே இப்
பங்கம் போகப் பணிந்திடுவேன் மெய்ப்—
பொருளானே

5. மகளே ஜெயசீலி மகளே உனின்
ஜகப்பேய் க்ஷணமே ஓடுமென்றார் அஜ்
ஜக ரக்ஷகன் சொல் பிசகாதே இதை—
அறிவேனே.

## 3.

### FINDS HER DAUGHTER SAFE.

### ஜெயசீலியை காணுதல்.

கலியாணி. ஆதி.

**பல்லவி.**

சிறு பெண்ணைக் கண்டாளே—சீரோபேனீக்யாள்
சிறு பெண்ணைக் கண்டாளே.

**அநுபல்லவி.**

சிறுமி ஜெயசீலியாள் சீராய் அமைந்திருக்க
குருபரன் சொல் நேரமே குணம் முற்றும் வாய்ந்திருக்க. சிறு.

**சரணங்கள்.**

1. அசுத்தாவி நடிப்போச்சே—அதனால் வந்த
அசங்கிதமெல்லாம் போச்சே
வசமாய் அப்பெண் வந்தாச்சே—வாரா நிந்தைகள்
வலிய நிர்மூலமாச்சே
விசுவாசத்தால் போராடி விபத்தினின்று மீட்டம்பெண்
பசுந்தரை பண்பாய் மேய்ந்த பசுபோல் படுத்திருக்க. சிறு.

2. நினைந்து நினைந்தெழுவாள்—பிம்ரோத் குலத்தாள்
நிமலனையே தொழுவாள்
தனையிகவே நெகிழ்வாள்—தான் பெற்ற தயை
தனமெனவே மகிழ்வாள்
அனைத்துமாட்கொண்ட பரன் அவளிடம் பெற்றார் தோல்வி.
நினைத்த கர்மத்தை நிலைநிறுத்தினளே நற்தேவி. சிறு.

3. அயலகத்தாரை அழைப்பாள்—அவளடைந்த
அநுபவமெல்லாம் உரைப்பாள்
ஜெயசீலி காட்டி 'இதோ பார்—சுகமே' என்று
ஜெயம்பெற்றதை விஸ்தரிப்பாள்
பயமுற்றும் பறந்தோட பகவான்மேல் மனம் நாட
நயமுற்றும் நிறைந்தோட நலம் ஈந்தோனைக் கொண்டாட சிறு.





## 4.

### BLESSES THE LORD FOR THE RECOVERY.

### ஜெயசீலி சுகமடைந்ததற்காக துதித்தல்.

தோடி. ரூபகம்.

**தேவாரம்.**

1
மங்கை மாமரிபாலனே எந்தன் மானுவேலனே தோத்திரம்
நங்கையர்க்கனுகூலனே எந்தன் நாத நீதனே தோத்திரம்.

2
வேதனைமா விளைத்த பேய் முற்றும் விடுத்த வேதனே தோத்திரம்
பேதமொன்றுமில்லாமல் செய்திட்ட போத சாதனே தோத்திரம்.

3
பாவியர்க்குலமாயினும் பரிபாலனம் செய்தாய் தோத்திரம்
சாவிலுந்த எனக்கும் மா தயை தாய்போல் காட்டினாய் தோத்திரம்.

4
என் மகள் ஜெயசீலியின் உயிர் ஏந்தி காத்திட்டாய் தோத்திரம்
எம் உயிர் முற்றும் உன்னுடையதே ஏசுநாயகா தோத்திரம்.

5
ஜீவகாலம் எம் ஜீவனைக் காக்கும் ஜீவ நாயகா தோத்திரம்
ஏழை மக்கள் எம் பாவம் போக்கிடும் ஏசு ரக்ஷகா தோத்திரம்.

## 5.

### PUBLISHES THE NEWS.

### சிநேகிதிகளுக்கு விளம்பரம் செய்தல்.

சங்கராபரணம். ஆதி.

**பல்லவி.**

அம்மா நான் என்ன சொல்லுவேன்
அவர் அருமை அவர் பெருமை
அதை உரைக்க என்றால் ஆகுமோ. அம்.

**அநுபல்லவி.**

அம்மான் அவரைப்போல அவனியில் யார்தான் உண்டு
அம்பரமே தெய்வீகன் அவதரித்தானார் என்பார்
எம்பிரானென்றே யானும் எத்தித் தொழுவேன் தினம். அம்.

**சரணங்கள்.**

1. சொல்லும் விண் செல்லும் சொல்லாமே
சொல் மெலிவும் உடன் வலிவும்
சீராய் அநுப்பித்தார் அறிவார்
சொன்னார் போ உன் குமரி சுகமாய் விட்டது என்றே
சொன்ன க்ஷணமே அவர் சொல்லால் சுகமடைந்தாள்
இன்னல் விளைத்த பேயும் மின்னல்போல் ஓடிப்போச்சே. அம்.

2. யாரென்றறிந்தேன் அவர் தாய்
பேர் மரியாள் ஊர் சரேத்தே
வேர் விளங்கும் ஈசாய் கோத்ரமாம்
பாரில் அவரைப்பெற பண்ண தவம் என்னவோ
பன்னிரு சீஷர்கள் பண்பாய் சூழ்ந்துப் பின்பற்ற
என்னை ரக்ஷித்த நாத எம்பெருமானைக் கண்டேன். அம்.





## 6.

### DOXOLOGY.

### மங்களம்.

ரீதிகௌளம். ஆதி.

**பல்லவி.**

சோபித மங்களம்—சீயோன் மனாட்டு
சோபித மங்களம்.

**அநுபல்லவி.**

பாப விமோசனனுக்கே மங்களம்
சுபமே மங்களம்—சீயோன் மனாட்டு

**சரணங்கள்.**

1. கன்னிமரிவித்திற்கு—காருணியாளின்,
கன்னி அவிழ்தத்திற்கு
பொன்னான் கற்பகத்திற்கு—பூதலத்தோரின்
பொன்னுலக சொத்திற்கு
மன்னாதி மன்னன் மகாராஜனுக்கு
மின்னாள் போஜனுக்கு—சீயோன் மனாட்டு. சோ.

2. ஆருயிர் ஈந்தோனுக்கு—அலகைதலை
அமுக்கி நசுக்கினோனுக்கு
மாறுதல் இல்லானுக்கு—மனு ஈடேற
மாட்சி விளைத்தோனுக்கு
பாருலகத்தோருய்ய பரிவோனுக்கு
மேருபோல்வானுக்கு—சீயோன் மனாட்டு. சோ.

மங்கள காண்டம் முற்றிற்று.

7.

## AUTHOR'S OFFERING.

## ஆக்கியோன் அஞ்சலி.

இராமமனோகரி. ஆதி.

### பல்லவி.

ஆனந்தசாகரா—எனக்
கபயமளித்த கருணாகரா.

### அநுபல்லவி.

ஞானப்பராபரா—என்
நன்மைக்குமே நித்திய ஆதாரா.

### சரணங்கள்.

1. ஆதிவார்த்தையாயான விண்ணோனே—எனக்
கானவாயுதித்த மண்ணோனே
நீதிமதி சரித்திரம் பண்ணேனே—அதை
நின் தயவால் செவ்வையாய் சொன்னேனே. ஆன.

2. ஏதுதற்கரிய என் தங்கமே—எனக்
குன் துணையல்லால் என்றும் பங்கமே
பூதலத்து ராஜ சிங்கமே—என்றும்
உன்னை அண்டினோர்க்கு பேர் சங்கமே. ஆன.

3. வினை ஒழிக்க உயிரை மாண்டவா—பாவம்
வினைத்தோரை குருசியால் மீண்டவா
எனையும் ரக்ஷிக்க தலைய பூண்டவா—அடி
யேனை உமக்காய் இழும் ஆண்டவா. ஆன.

4. தோத்திரமே எந்நாளும் தாயனே—என்
சாந்தியை ஏற்றுக்கொள்ளும் என் நேயனே
கோத்திரத்தாரெல்லார்க்கும் ராயனே—எக்
குறை ஒழித்தே மேய்ப்பாய் நல்லாயனே. ஆன.



## WESLEYAN METHODIST CHURCH,

MYLAPORE, MADRAS.

## Thanksgiving Service

*Sunday, 17th November, 1918.*

நம்முடைய தேவனாகிய கர்த்தரின் செய்கையை
சீயோனில் விவரிப்போம் வாருங்கள்.—எரே. 51 : 10.

இராகம் பைரவி (சிந்து.) அ[illegible]

### கண்ணிகள்.

1. கர்த்தருக்கே தோத்ரம்—காருண்ய கர்த்தருக்கே தோத்ரம்
அத்தனுக்கே தோத்ரம்—அனந்தம் அநவரதம் தோத்ரம்.

2. ஆண்டுகள் நாலுக்குமேல்—ஜகத்தை—ஆண்ட சனி ஓட்டி
ஈண்டு ஜெயம் தந்த—பேரில்லா—இறைபருக்கே தோத்ரம்.

3. சத்துருக்கள் செய்த—எண்ணில்லா—சங்கடத்தினின்று
பத்திரமாய் மீட்ட—பண்புள்ள—பார்த்திபர்க்கே தோத்ரம்.

4. பாழும் யுத்தம் விளைத்த—பொல்லாத—பஞ்சம் விஷக்காய்ச்சல்
யாவினின்றும் காத்த—யேகோவா—அம்பரர்க்கே தோத்ரம்.

5. வாழ்க பிரித்தானியா—மன்னன் ஜார்ஜ்—வாழ்க நல்சக்ரவர்த்தி
வாழ்க நம் தாய் தேசம்—இந்தியா—வண்மையுடன் வாழ்க.

6. சேனைத்திரள் வாழ்க—களத்தில்—சேவித்த யாவர் வாழ்க
ஆணைக்காய் போர் செய்த—அமெரிக்கா—அன்பர் தேயம் வாழ்க

7. சங்கம் வெஸ்லியன் வாழ்க—மைலாபூர்—சார்ந்த சபை வாழ்க.
தங்க சபைகள் வாழ்க—சீயோனின்—தூய மணாளன் வாழ்க.